[திரு. கி. வெங்கடாசலம்] [1987 மார்ச் 2

இலங்கை இனப் பிரச்னைக்கு முடிவாகவும், இருசாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலும் தீர்வு காண இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மைய அரசு எடுக்கும அனைத்து நல்ல முயற்சிகளும் வெற்றியடையவும், அதற்குத் துணை நிற்க வேண்டுமாய் மாநில அரசை வேண்டியும் விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பேரவைக் கூட்ட நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில், பேரவைக் கூட்டங்களை காலை 10 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 2 மணிக்கு முடிக்கலாம் என்றும், காலை 10 மணி முதல் 11 மணி வரை வினாக்கள்—விடைகள் நேரமாக இருக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவு 3—3—1987, நாளை முதல் அமலுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(7) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி)

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பிப்ரவரி 27 ஆம் நாள் மேதகு ஆளுநர் அவர்களால் ஆற்றப்பட்ட உரையைப் பாராட்டி, வரவேற்று என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே சொல்ல விழைகிறேன்.

மொத்தத்தில், இந்த ஆளுநர் உரை வருங்காலத்தை எதிர் நோக்கி வருங்கால தமிழகம் வளமோடு சிறக்க வேண்டுமென்று மக்களுக்குப் பிரச்சினை இல்லாமல் பொருளாதாரத்திலே உயர்வு காணவேண்டுமென்ற நோக்கத்தோடு நல்லமுறையிலே கொண்டுவரப்பட்டிருக்கிற, பல்வேறு கொள்கைகளை அடிப்படையாகச் சொல்லி கொண்டுவரப்பட்டிருக்கிற உரையாகும். தொழில் துறை, பொதுவாகவே இயற்கையின் பிடியிலே இருக்கின்ற இரும்பு, மின்சாரம், நீர்வளம் என்ற மூன்று முக்கிய பொருள்களை அடிப்படையாகக் கொண்டுதான் வளர முடியும். இயற்கையிலேயே, தமிழகத்தில் இந்த மூன்று—இரும்பு, மின்சாரம், நீர்வளம்—மற்ற மாநிலங்களைவிட குறைந்த அளவிலே கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருந்தாலும், இவற்றை வைத்து, குறைந்த அளவிலே இருக்கிற இயற்கை வளங்களை வைத்துக்கொண்டு நல்ல நிர்வாக அமைப்பின் காரணமாகவும், திறமையான கொள்கைகளின் காரணமாகவும், நல்ல அடிப்படையான நிர்வாகத்தைக் கொண்டுவருவதன் காரணமாகவும் தொழில் வளர்ச்சியிலே ஓரளவிற்கு நல்ல முன்னேற்றத்தை தமிழகம் பெற்றிருக்கிறது.